CC. No.237/2025

நாள் :-10.03.2026

அ.சா.34 :-திரு. மதிவாணன்

(1, 3 எதிரிகள் ஆஜர், 2nd Accused dispensed, ).

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

எதிரி மகாலெட்சுமி தரப்பு குறுக்கு விசாரணை :-

03.04.2014 அன்று என்னை விசாரணை அதிகாரியாக துணைபதிவாளர் மயிலாடுதுறை நியமித்தார். 07.04.2014 அன்று நான் எனது விசாரணையை தொடங்கினேன். 29.09.2014 அன்று நான் எனது அறிக்கையை துணை பதிவாளரிடம் சமர்பித்தேன். நான் என்னுடைய விசாரணையை நேரம் கிடைக்கும்போது தொடர்ச்சியாக நடத்தினேன். 90 நாட்களுக்குள் நாங்கள் விசாரணை முடிக்க வேண்டும், பின்பு மீண்டும் தேவைப்பட்டால் இரண்டு முறை மூன்று மாதங்களுக்கு நேரம் கேட்கலாம். அதவாது ஆறு மாதத்திற்கு விசாரணையை முடிக்க கால நேரம் நீட்டிக்கப்படலாம். நான் ஒரு மாதத்திற்குத்தான் முதல் முறை கால நீட்டிப்பு கேட்கமுடியும். அதன் பிறகு கேட்கும் நேரம் மூன்று மாதத்திற்குள் தான் இருக்க வேண்டும் என்று சொன்னால் அது சரியல்ல. பொதுவாக நான் தொடங்கிய நாள் முதல் 06.07.2014க்குள் விசாரணையை முடிக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். கால நீட்டிப்பு கேட்கப்பட்டு 27.09.2014 அன்று தான் முடித்து 29.09.2014 அன்று அறிக்கை சமர்ப்பித்தேன். நான் கால நீட்டிப்பு கேட்டு எனக்கு 02.10.2014 வரை விசாரணையை முடிக்க கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. அந்த நீட்டிப்பு உத்தரவு 21.08.2014 அன்று கொடுக்கப்பட்டது. நான் கால நீட்டிப்பு கோரி துணை பதிவாளருக்கு கடிதம் வைத்தேன். அந்த கடிதம் என்று வைத்தேன் என்ற தேதி ஞாபகம் இல்லை. துணை பதிவாளர் மண்டல இணை பதிவாளருக்கு கடிதம் வைத்து, மண்டல இணை பதிவாளர் 30.06.2014 அன்றும், 17.07.2014 அன்றும் பதிவாளருக்கு கடிதம் அனுப்பி கால நீட்டிப்பு வழங்கப்பட்டது. நான் கால நீட்டிப்பு கோரி காலக்கெடு முடிவதற்கு முன்பு துணை பதிவாளருக்கு கடிதம் அனுப்பியதாக கூறுவது முற்றிலும் தவறு என்று சொன்னால் சரியல்ல. 06.07.2014 முதல் 21.08.2014 வரை நான் விசாரணை செய்தது முற்றிலும் தவறு என்று

CJM, MAYILADUTHURAI.

சொன்னால் சரியல்ல. எதிரி மகாலெட்சுமி 19.08.2010–லிருந்து மருந்தாளராக நுகர்வோர் கூட்டுறவு மொத்த மருந்தக சாலையில் நியமிக்கப்பட்டார். அவர் பணியல் 20.12.2010 அன்று சேர்ந்தார். மருந்தாளருக்கு என்ன பணி என்று எனக்கு தெரியுமா என்றால் அவரை நியமிக்கும்போது அந்த உத்தரவில் குறிப்பிடுவார்கள். மருந்தாளர் இல்லாமல் மருந்துக்கடை நடத்த கூடாது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. 01.08.2013 முதல் மேலாண்மை செயல்முறை ஆணைப்படி எதிரி மகாலெட்சுமிக்கு மேற்கொண்டு பொறுப்பு மற்றும் கடமைகள் கொடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு எதிரி மகாலெட்சுமிக்கு மேற்கொண்டு பொறுப்பு மற்றும் கடமைகள் கொடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவது இந்த வழக்கில் அவரை சேர்க்கவேண்டும் என்ற காரணத்தினால் போடப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. எதிரி மகாலெட்சுமிக்கு விசாரணையில் சொல்லியுள்ளது போல் அலுவலக மற்ற வேலைகளை எதுவும் பார்க்கவில்லை, மருந்தாளர் பொறுப்பினை மட்டும்தான் பார்த்தார் என்றால் சரியல்ல. எதிரி மகாலெட்சுமிக்கு மருந்தகம் சம்மந்தமான பிற பொறுப்புகள் எதையும் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறாக எதிரி மகாலெட்சுமி வசம் எந்தவிதமான பொறுப்புகளும் ஒப்படைக்காத காரணத்தினால் அவர் மீது எனது விசாரணையில் கண்டுள்ள படி கையாடல் செய்வதற்கு எந்தவிதமான முகாந்திரமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. நான் விசாரணை உரிய முறையில் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காலநீட்டிப்பு இல்லாத நேரத்தில் விசாரணை செய்த காரணத்தினால் என்னுடைய விசாரணை அறிக்கை முற்றிலும் தவறு என்று சொன்னால் சரியல்ல. எதிரி மகாலெட்சுமிக்கும் என்னுடைய விசாரணையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் எந்தவிதமான அடிப்படை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வேண்டுமென்றே எதிரி மகாலெட்சுமியை இந்த வழக்கில் தாமதமாக சேர்க்கவேண்டி மேலஅதிகாரிகள் நடவடிக்கை எடுத்து, அதன் பின்னர் அந்த அடிப்படையில் என்னை விசாரணை அறிக்கையை தாக்கல் செய்ய வைத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரி மகாலெட்சுமிக்கும் இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை

CJM, MAYILADUTHURAI.

என்று சொன்னால் சரியல்ல. சங்கத்தில் பணிபுரியும் நபர்களுக்கு உரிய பொறுப்புகளையும், பணிகளையும் தீர்மானித்த பிறகு அதனை பொறுத்து சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கு அந்த சங்கதிகளை எழுத்து மூலமாக தெரிவிக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு எதுவுமே தெரிவிக்கவில்லை என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மகாலெட்சுமியிடம் தெரிவித்து ஒப்புதல் பெற்ற நகலை என்னிடம் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். பொதுவாக மருந்தகத்திற்கு சரக்கு இருப்பு பரிசோதனை வருடம் வருடம் நடத்தப்படும். மயிலாடுதறை நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு வருடம் வருடம் சரக்கு இருப்பு பரிசோதனை நடத்தப்பட்டது என்றால் சரிதான். என்னை விசாரணை அதிகாரியாக போடுவதற்கு முன்பு 30.09.2013 அன்று சரக்கு இருப்பு பரிசோதனை ஆய்வு நடத்தப்பட்டது. எனக்கு கொடுத்த உத்தரவில் விற்பனை மற்றும் இறுதி இருப்பில் வித்தியாசம் தொடர்பாக 01.04.2011 முதல் 27.01.2014 வரை மயிலாடுதுறை மருந்தக பிரிவில் விசாரணை மேற்கொள்ளுமாறு உத்தரவிடப்பட்டது. எந்த புகாரின் அடிப்படையில் என்னை விசாரணை அதிகாரியாக துணை பதிவாளர் நியமித்தார் என்று எனக்கு தெரியாது. என்னுடைய விசாரணையில் Auditor விற்பனை, இருப்பு குறைவு மற்றும் இறுதி இருப்பு வித்தியாசம் குறித்த Auditor அறிக்கை எதுவும் பார்வையிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேலும், இந்த வழக்கில் வருட வருடம் Auditor அறிக்கை சமர்ப்பித்த Auditorஉமா மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரை நான் விசாரிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் விசாரித்த 45 மருந்து பெரு வணிகர்களிடம் அவர்கள் வைத்திருந்த பதிவேடுகள் எதையும் கைப்பற்றவில்லை. அவர்களிடமிருந்து குறிப்பிட்ட தேதிக்கான கணக்கு விவரம் பட்டியல் மட்டும் நான் பெற்றுக்கொண்டேன். ஒவ்வொரு கடையிலும் இருப்பு கொடுக்கும்போதும், பெறும்போதும் பதிவேடுகளில் பதிவ செய்யும் ஆவணங்களை நான் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். எந்தவித முகாந்திரமும் இல்லாமல் வாக்குமூலங்கள் மட்டும் பெற்று எதிரிகள் மீது சரிவர விசாரணை செய்யாமல் விசாரணையை முடித்து அறிக்கை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரியல்ல.

CJM, MAYILADUTHURAI.

3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

எதிரி நடராஜன் மொத்த விற்பனை பண்டக சாலையில் உதவியாளராக உள்ளார். எதிரி நடராஜனுக்கு மருந்தகத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அவரை 07.12.2010 அன்று மருந்து விற்பனை பிரிவில் பொறுப்பு பதிவேடு சரிபார்க்க நடராஜனுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. நடராஜன் அந்த பொறுப்பு பதிவேடுகளை பார்வையிட்டது 2011 முதல் 2012 வரை என்று சொன்னால் சரிதான். நடராஜனை பொறுத்தவரை எதிரி மகாலெட்சுமி உடன் சேர்ந்து போலியான ஆவணங்களை தயார் செய்ததாக என் விசாரணையில் நான் குறிப்பிடவில்லை. அவர் மீது உள்ள குற்றம் மகாலெட்சுமி ஒப்புவித்த ஆவணங்களை சரிவர பராமரிக்காமல் தனி அலுவலரிடம் சமர்பித்ததுதான். அந்த தவறுக்காக நடராஜனுக்கு துணை பதிவாளர் அபாரதம் செலுத்துவதற்கு உத்தரவிடப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த தண்டவரி பணத்தை செலுத்த தேவையில்லை என்று மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 01.08.2025 அன்று உத்தரவிடப்பட்டது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் தனி அலுவலர் எவரையும் விசாரிக்கவில்லை. பொதுவாக ஒரு பணி முடிந்தவுடன் உடனடியாக அறிக்கையை உயர் அதிகாரிகளிடம் சமர்பித்துவிடுவோம் என்றால் சரிதான். 2012 வருடத்திலேயே நடராஜன் பணி முடிந்துவிட்டது என்று சொன்னால் சரிதான். அவர் தனி அலுவலரிடம் ஒப்புவித்த அறிக்கை குறித்து நான் விசாரித்தேனா என்றால் விசாரிக்கவில்லை. பொதுவாக Purchase Return செய்தால் ஒன்று இரண்டு வருடம் கழித்துதான் ஒப்புதல் வரும் என்று சொன்னால் சரிதான். Expiry Return Register யாரால் தயாரிக்கப்பட்டது என்று என் விசாரணையில் தெரியவரவில்லை. ஆரோக்கியராஜ் மற்றும் மகாலெட்சுமி தயார் செய்திருக்கலாம். நான் அரசு தரப்பில் தாக்கல் செய்த அ.த.சா.ஆ.57 பட்டியல் என்னால் Expiry Return Register-யை பார்வையிட்டு தயார் செய்யப்பட்டது. 2011 முதல் 2012 வரையிலான காலக்கட்டத்தில் Audit Report நடைபெற்றது. அதில் இந்த குறைபாடுகளை குறிப்பிட்டுள்ளார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. Expiry Return Register -க்கும் எதிரி நடராஜனுக்கும் எந்தவிதமான சம்மந்தமும் கிடையாது என்றால் சரிதான்.

CJM, MAYILADUTHURAI.

இந்த Expiry Return Register பதிவேட்டை வைத்து மகாலெட்சுமி தவறு செய்திருந்தால் அதை நடராஜானால் கண்டுபிடிக்க இயலாது என்று சொன்னால் சரிதான். ஆனால், அந்த பெருவணிகர்களை தொடர்புக்கொண்டு கேட்டிருக்கலாம். நடராஜன் எந்தவித குற்றமுறு செயல்களையும் செய்யவில்லை என்றும், சரிவர விசாரணை செய்யாமல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி ஆரோக்கியராஜ் தரப்பு குறுக்குவிசாரணை:–</u>

எதிரிகள் மகாலெட்சுமி மற்றும் நடராஜன் தரப்பு குறுக்கு விசாரணை அவ்வாறே ஏற்றுக்கொள்ளப்பட்டது.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.